IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.399/2019

Deposition of Witness PW6

Name :மீனாட்சிசுந்தரம் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பவ சமயம் அதாவது 2004 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில் கரூரில் உள்ள கரூர் வைசியா வங்கி தலைமை அலுவலகத்தில் அதிகாரியாக (Scale-II)பணிபுரிந்து வந்தேன். எதிரி மீது குற்ற அறிக்கை நான் பதிவு செய்யவில்லை என்றால் எச்ஆர் டிபார்ட்மெண்ட் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதில் நான் விசாரணை முன்னெடுப்பு அதிகாரியாக இருந்தேன். அதில் விசாரணை அதிகாரியாக யார் இருந்தார் என்றால் நீண்ட காலம் ஆகிவிட்டதால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால், அவருக்கு 2008 முதல் 2009 வரையிலான காலகட்டத்தில் அறிவிப்பு அனுப்பப்பட்டு அவர்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:37:02 +0530

ஆஜராகாததால் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டது. அந்த சமயத்தில் எதிரி வங்கியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு பின்னிட்டு விசாரணையின் முடிவில் பணி நீக்கம் செய்யப்பட்டார். 2008 முதல் 2009 வரையிலான காலகட்டத்தில் அறிவிப்பு யாருடைய பெயரில் அனுப்பப் பட்டது என்றால், அலுவல் ரீதியாக அனுப்பப்பட்டது. எதிரி மீதான குற்றம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அலுவல் ரீதியாக எனக்கு தெரியும்.

எதிரிக்கும் குற்ற சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், நான் வங்கியின் பணியாள் என்பதால் வங்கிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு மின்னஞ்சல் அனுப்பியதாக நான் சொல்லியுள்ள நிலையில் எந்த மின்னஞ்சல் முகவரியில் இருந்து எதிரி மின்னஞ்சல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. விசாரணை அதிகாரி தெரிவித்ததன் அலுவலக மீட்டிங்கில் தெரிவித்ததின் அடிப்படையில் தான் எனக்கு தெரியும். வழக்கு குற்ற சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எனது மேலதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:37:09 +0530